# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082843

District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2023 | FIR No. மு.த.அ. எண் 09/2023 | Date: நாள் 29.09.2023

(i) Act சட்டம்: Pc Act 1988 — Sections பிரிவுகள்: u/s 7 of PC Act 1988 as

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: amended by the P C (Amendment) Act 2018.

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

(a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
① 28.09.2023 at 12.00 PM
② 28.09.2023 at 14.45 hrs
③ 29.09.2023 at 13.15 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.09.2023 | Time : நேரம் 14.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில பதிவு விவரம் எண் 29.09.2023 | Time : நேரம் 15.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வார்டு-56, மதுரை மாநகராட்சி அலுவலகம் பொன்னகரம், மதுரை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் க. கணேசன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கதிரேசன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2023 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் வேன் வெல்டிங் பட்டறை | (g) Address : முகவரி பிளாட் எண்.5, வார்டு-56, பொன்னகரம் 3வது தெரு, மதுரை.16

Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. விஜயகுமார், உதவி பொறியாளர், வார்டு எண்-56, மதுரை மாநகராட்சி அலுவலகம், பொன்னகரம், மதுரை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது -

13. Action taken Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29.9.2023 [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.09.2023 at 15.50 hrs

Name: பெயர் [handwritten name]
Rank: நிலை காவல் ஆய்வாளர்
மதுரை.
(29.09.2023)

GCP 240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 29.09.2023-ஆம் தேதி பகல் சுமார் 14.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை பொன்னகரம் 3வது தெரு, வார்டு எண்-56, பிளாட் எண்-5-ஐ சேர்ந்த கதிரேசன் மகன் திரு.க.கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் க.கணேசன், த/பெகதிரேசன், பிளாட் எண் 5,வார்டுஎண் 56, பொன்னகரம் 3-வது தெரு, மதுரை - 16. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை பொன்னகரத்தில் குடும்பத்துடன் வசிக்கிறேன். ராஜா மில் ரோட்டில் செல்வ கணபதி லேத் வெல்டிங் ஓர்க்ஷாப் வைத்து பிழைத்து வருகிறேன். மேலேகுறிப்பிட்டுள்ள பொன்னகரம் 3-வது தெருவில் நாங்கள் குடியிருக்கும் வீடு எனது பெயரில் உள்ளது. அதனை கடந்த 2007-ம் ஆண்டு கட்டினேன். மதுரை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட வரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி அனைத்தையும் இதுநாள் வரை சரியாகச் செலுத்தி வருகிறேன். எனது வீட்டுக்கான புதிய வரிவிதிப்பு எண் 115 / 056 / 903111 மற்றும் பழைய எண் 115 / 337044 ஆகும். இந்நிலையில், கடந்த 25.09.2023-ம் தேதி முதல் 4 நாட்களாக எங்கள் வீட்டிலிருந்து கழிவுநீர் வெளியேறிச் சென்று பொது பாதாளசாக்கடை இணைப்பில் அடைப்பு ஏறபட்டு சாக்கடை நிரம்பி கழிவுநீர் எங்கள் வீட்டின் போர்ட்டிகோ மற்றும் பக்கத்து வீடுகளுக்குள் வந்துவிட்டது. அந்த அடைப்பு தானாகவே சரியாகிவிடும் என்று .இரண்டு நாட்கள் காத்திருந்தோம். மழைக்காலம் என்பதால் சாக்கடை அடைப்பு சரியாகமல் தணணீர வீட்டின் உள்ளேயும் வெளியேயும் தேங்கி நின்றது. எனவே, நேற்று 28.09.2023-ம் தேதி காலை சுமாா 9 மணியளவில் எனது மகன் செல்வகணபதி எங்கள் பகுதியிலுள்ள மாநகராட்சி 56-வது வார்டு அலுவலகத்துக்கு நேரில் சென்று அங்குள்ள புகார் பதிவேட்டில் எங்கள் வீட்டின் முன்பு உள்ள பொது பாதாள சாக்கடை அடைப்பு குறித்து எழுதி வைத்துவிட்டு வந்தான். அப்போது அங்கிருந்த ஊழியர் வார்டு அலுவலகத்தின் சுவற்றில் எழுதி ஒட்டியிருந்த 85087 73766 என்ற போன் நம்பரில் பேசி புகார் தெரிவிக்குமாறு சொன்னதன் பேரில், எனது மகன் நேற்று காலை சுமார் 09.30 மணியளவில் தனது செல்போன் 96003 17033-ல் இருந்து பாதாளசாக்கடை ஆய்வாளர் திரு.ஓம் முருகா என்பவரின் செல்போனில் தொடர்புகொண்டு பேசினான். அப்போது அவர் என் மகனிடம் அட்ரஸ் விசாரித்த பின்பு காலை சுமார் 10.00 மணியளவில் திரு.ஓம் முருகா நேரில் வந்து

எங்கள் வீட்டைப் பார்வையிட்ட பின்னர் A.E. திரு.விஜயகுமார் என்பவரை நேரில் வந்து சந்திக்குமாறு கூறிவிட்டுச் சென்றார். எனவே, நான் நேற்று மதியம் சுமார் 11.00 மணியளவில் வார்டு ஆபீசுக்கு நேரில் சென்றபோது A.E. அலுவலகத்தில் இல்லை. அங்கிருந்த ஊழியர் ஒருவர் A.E. திரு.விஜயகுமார் அவர்களின் 98426 40231 என்ற செல்போன் எண்ணை என்னிடம் கொடுத்து, அதில் பேசுமாறு கூறினார். எனவே, நான் எங்கள் கடைக்கு வந்து காலை சுமார் 11.30 மணியளவில் எனது செல்போன் எண் 94434 77224-ல் இருந்து A.E. செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது அவர் என்னை மீண்டும் அலுவலகத்துக்கு நேரில் வரச் சொன்னார். நான் உடனே புறப்பட்டு மதியம் சுமார் 12.00 மணியளவில் வார்டு அலுவலகத்துக்கு நேரில் சென்றபோது அங்கு இருந்த A.E. திரு.விஜயகுமார் என்னிடம் விவரம் கேட்டபின்னர் உங்கள் வீட்டுப்பக்கம் சாக்கடை அடைப்பை எடுக்க வேண்டுமானால் ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் இதுவரை மாநகராட்சிக்கு அனைத்து வரிகளையும் ஒழுங்காக கட்டியுள்ளேன், அப்பறம் எதற்கு சார் பணம் என்று கேட்டதற்கு அவர் என்னிடம் இது எனக்கு கொடுக்க வேண்டியது என்று கூறி பணத்துடன் வந்தால் வேலையை தொடங்கிவிடலாம் என்று கூறி என்னை அனுப்பிவிட்டார். எனவே, நான் வருத்தத்துடன் வீட்டுக்கு வந்துவிட்டேன். ஆனால், நேரம் செல்லச் செல்ல வீட்டில் யாரும் சாப்பிட முடியாத அளவுக்கு சாக்கடை நாற்றம் அதிகமாகிவிட்டது. எனவே, நான் மீண்டும் நேற்று மதியம் சுமார் 02.45 மணியளவில் எனது மகனின் செல்போன் எண் 96003 17033-ல் இருந்து A.E. திரு.விஜயகுமார் அவர்களது செல்போனில் தொடர்புகொண்டு சாக்கடை நாற்றம் அதிகமாகி வருகிறது, மழை வேறு தூறிக் கொண்டிருக்கிறது, எப்படியாவது சாக்கடை அடைப்பை சரி செய்யுங்கள் என்று கெஞ்சிக் கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்டபணம் ரூ.20,000/-ஐ கொடுத்தால் உடனே உங்கள் வேலையை முடித்துவிடலாம் என்று சொன்னார். நான் அவரிடம் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, தற்போது தொழிலும் சரியில்லை, எனவே கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் உங்களுக்காக 2,000/- ரூபாய் குறைத்துக் கொள்கிறேன், எனவே 18,000/- ரூபாய் கொடுத்தால் உடனே வேலையை தொடங்கிவிடலாம் என்றும், வரும்போது மனுஎழுதிக் கொண்டுவருமாறு கூறிவிட்டு போனைகட் செய்துவிட்டார். வேறுவழியில்லாமல் நானும் என் குடும்பத்தினரும் சாக்கடை நாற்றத்தில் 4-வது நாளாக இருந்து கஷ்டப்பட்டோம். எனவே, நான் இன்று 29.09.2023-ம் தேதி மதியம் சுமார் 1.15 மணிக்கு

A.E. சொன்னபடி ஒரு மனு எழுதிக் கொண்டு அவரது அலுவலகத்துக்கு நேரில் சென்று மீண்டும் சந்தித்து கேட்கலாம் என்று எண்ணி, அவரது அலுவலகத்துக்கு நேரில் சென்று சந்தித்தபோது அவர் எனது மனுவை வாங்கிக் கொண்டு நான் கேட்ட 18,000/- ரூபாய் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் தற்போது அவ்வளவு பணம் என்னிடம இல்லை, எப்படியாவது சரிசெய்யுங்கள், பின்னர் பார்க்கலாம் என்று கெஞ்சிக் கேட்டேன். அதற்கு அவர் சரி 8,000/- ரூபாய் குறைத்துக் கொண்டு 10,000/- ரூபாய் கொடுங்கள், அப்போதுதான் உங்கள் வீட்டில் சாக்கடை அடைப்பை சரிசெய்ய முடியும், இல்லையென்றால் நீங்கள் சாக்கடை நாற்றத்திலேயே இருக்கவேண்டும் என்று கோபமாகச் சொல்லி என்னை திருப்பி அனுப்பிவிட்டார். நான் மதுரை மாநகராட்சிக்கு அனைத்து வரிகளையும் ஒழுங்காகச் செலுத்தியுள்ள நிலையில், A.E. திரு.விஜயகுமார் எங்கள் வீட்டின் முனபுறம் உள்ள பாதாளசாக்கடை அடைப்பை சரிசெய்வதற்கு லஞ்சம் கேட்பது மிகவும் வேதனையாக இருந்தது. எனவே, என்னிடம் ரூ.10,000/- லஞ்சமாக கேட்கும் A.E. திரு.விஜயகுமார் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் கடந்த 24.01.2023-ம் தேதியன்று நான் எங்கள் வீட்டுக்கு பணம் கட்டிய வீட்டுவரி ரசீது, குடிநீர் வரி ரசீது, பாதாள சாக்கடை வரிரசீது ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், A.E. திரு.விஜயகுமார் முன்பணமாகக் கேட்டலஞ்சப் பணம் ரூ.10,000/- கொண்டுவந்துள்ளேன்.

இபபடிக்கு (ஒ-ம்) XXXXXX (K.கணேசன்), 29.9.2023.

**Sir, Received the written complaint on 29.09.2023 at 14.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 09/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 15.15 hrs and took up investigation. Sd./-XXXXXX (T. Suriyakala) 29.09.2023, Inspector of Police, V&AC, Madurai.**

Original FIR along with original typed complaint of Tr. K.Ganesan, S/o. Kathiresan, Plot No.5, Ward No.56, Ponnagaram 3rd Street, Madurai-16 along with House Tax receipt, Drinking Water Tax receipt and Drainage Tax receipt Paid on 24.01.2023 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

29.9.23

(T. Suriyakala)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.